**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2 -ஆம் நாள் சனிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 3/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 81/2016**

1.மணி
2.முத்தையா
3.பாபு ...... மனுதார்கள்/வாதிகள்

/எதிர்/

1. ராமலெட்சுமி
2. சாந்தி
3. போதுமணி
4. ராஜேஸ்வரி
5. உதயகுமார்
6. தனி வட்டாட்சியர்
நிலஎடுப்பு பிரிவு, ஆனந்தபுரம், மானாமதுரை
7. சிறப்பு நில எடுப்பு அலுவலர் மற்றும்
மாவட்ட வருவாய் அலுவலர்
மாவட்ட ஆட்சியர் வளாகம், புதுக்கோட்டை
8. முத்துகருப்பன் என்ற ராஜீ ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(D8 is impleaded asper order in IA.No.417/2018) dt.03.07.19 and
Amended as per order of IA.No.1/2019 dt.29.07.19)

இம்மனு என்முன்பு 25.07.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T. முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கோபாலகிருஷ்ணன்அவர்கள் ஆஜராகி, எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளநிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 1 ரூல். 10(2) பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி மனுவில் கண்ட விபரப்படி தாவா வழக்கின் 2, 3 வாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதியை Exonerate செய்து வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தநிலையில், தாக்கல் செய்யப்பட்ட திருத்த மனுவுடன் SLR நகல் தாக்கல் செய்யப்பட்டு, அதனடிப்படையில் சீர்திருத்த மனுவும் ஐ.ஏ.எண்.2/2021 நாள் 11.11.2024 ல் அனுமதிக்கப்பட்டு, அதன்படி தாவா வழக்கில் 2, 3 வாதிகள் மற்றும் 8 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் பாகஉரிமை இல்லை என்ற நிலைப்பாடு ஏற்பட்டுவிட்டதாலும், மேற்படி 2, 3 வாதிகள் மற்றும் 8 ம் பிரதிவாதியைப் பொறுத்து தாவா வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்பதாலும் பிராதின் பரிகாரம் விபரம் திருத்தப்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில் தாவா வழக்கின் 2,3 வாதிகள் மற்றும் 8 ம் பிரதிவாதியைப் பொறுத்து எவ்வித பரிகாரக் கோரிக்கையும் இல்லை என்ற நிலையில் சீர்திருத்த பிராதும் தன்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில் தாவா வழக்கின் 2, 3 வாதிகள் மற்றும் 8 ம் பிரதிவாதியை Exonerate செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரையின் சுருக்கம்:-**

மேற்படி வழக்கின் 8 ம் பிரதிவாதியையும் வழக்கிற்கு அவசிமான கட்சிக்காரர் என்று மனுதாரர்கள் தரப்பில் மனு தாக்கல் செய்து அதுவும் I.A.No.417/2018 மனுவின் பிரகாரம் கடந்த 03.07.2019 ம் தேதி உத்தரவிடப்பட்டதன் பேரில், வழக்கில் கட்சிக்காரராக சேர்க்கப்பட்டு பிராதும் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் தங்கள் தரப்பில் எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்குச் சொத்துக்களில் மனுதாரர்களுக்கோ, 8 ம் பிரதிவாதிக்கோ எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் வழக்கின் 2, 3 வாதிகளுக்கும், 8 ம் பிரதிவாதிக்கும் உரிமைஉள்ளது என்று வாதிகள் வழக்கை தாக்கல் செய்துவிட்டு 9 ஆண்டுகளுக்கு பின்பு பின்யோசனையின் அடிப்படையில்

தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள தள்ளுபடிக்குரியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 4. 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரையின் சுருக்கம்:-

மேற்படி சீர்திருத்த பிராதில் மனுதாரர் அசல் வழக்கு தாவா சொத்தில் 4 ல் 1 பாகம் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என கோரி வழக்கு தாக்கல் செய்து, பின்னீடு சீர்திருத்த பிராதில் 1ம் மனுதாரருக்கு மட்டும் தாவா சொத்தில் 2 ல் 1 பாகம் கிடைக்கத்தக்கது என்றும், மற்ற 2, 3 மனுதாரருக்கு உரிய உரிமை குறித்து எவ்வித பரிகாரமும் கோராமல் சீர்திருத்த பிராது தாக்கல் செய்யப்பட்டது என்றும், 2, 3 மனுதாரர்கள் மற்றும் 8ம் எதிர்மனுதாரர் தந்தையான கல்குறிச்சியை சேர்ந்த இராமசந்திரன் எந்த வகையில் உரிமையுள்ளவர் அல்லது உரிமையற்றவர் என்று சீர்திருத்தப்பிராதில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், தாவா சொத்து சம்பந்தமாக நில எடுப்பு மேற்கொள்ளும் காலகட்டத்தில் தாவா சொத்தின் அக்கறை குறித்தும் அவர்களது உரிமை குறித்தும் தெரிவிக்கும் பொருட்டு கடந்த 06.01.2015 பொது அறிவிப்பு அறிக்கை வெளியிட்டு தமது அலுவலகத்தில் விசாரணையின் போது நீலமேகம் மகன் முத்தையா என்பவர் இறந்துவிட்டார் என்றும் அவர் தனக்கு சித்தப்பா உறவுமுறை என்றும், தாவா சொத்து தொடர்புடைய நபர்களிடம் விசாரணை அறிவிப்பினை கொடுத்துவிடுகிறேன் என்று 3ம் மனுதாரர் பாபு அறிவிப்பினை பெற்று சென்றுள்ளார் என்றும், பின்னர் ஆதிமுருகன் மனைவியான ராஜேஸ்வரி தாவா சொத்தின் கையக நிலத்திற்கான இழப்பீட்டு தொகை உரிய வாரிசுதாரர்களுக்கு வழங்குமாறு கோரியுள்ளார் என்றும், இவ்வாறு தாவா சொத்தில் வாரிசுதாரர்களின் பங்கு உரிமை குறித்து தீர்மானிக்க 1ம் மனுதாரர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தற்போது 1 ம் மனுதாரருக்கு மட்டும் 2ல் 1 பாகம் உரிமையுள்ளது என தன்னிச்சையாக தீர்மானித்துக் கொண்டு 2, 3 மனுதாரர் / வாதிகள் மற்றும் 8 ம் எதிர்மனுதாரர் தாவா வழக்கில் நீக்கரவு செய்ய தாவா மனு தாக்கல் செய்திருப்பது காலம் கடந்த செயல் என்றும், தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் முத்தையாவின் வாரிசுதாரர்கள் அனைவரும் தரப்பினராக இருப்பது அவசியமாகும் என்றும், தாவா சொத்தில் கையக நில இழப்பீடு தொகையை பெற தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5. <u>இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-</u>**

மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இடையீட்டு மனு எண்.2/2021 நாள் 11.11.2024 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் Consequential Amendment ஆன இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து 2, 3 வாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதியை Exonerate செய்து வழக்கை மேல்நடத்த இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு ஆகஸ்டு் 02 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.08.02 17:43:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.08.02 17:43:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 3/2025**

**in**

**OS.No. 81/2016**

**Order**

**Dated  02.08.2025**